# History of India up to 1206 C.E
## Code no: 18K1H01

## இந்திய வரலாற்று சான்றுகள் (Sources)

### இலக்கியச் சான்றுகள்

வேதங்கள் – ரிக், யஜுர், சாம, அதர்வண
இதிகாசங்கள், புராணங்கள், புத்த சமய
இலக்கியங்கள், அன்றாட நிகழ்ச்சித் தொகுப்புகள்
அயல் நாட்டவரின் நூல்கள் + கிரேக்கர்கள், ரோமர்கள்,
சீனர்களின் குறிப்புகள்.

### தொல்பொருள் சான்றுகள்

a) கல்வெட்டுகள். – அசோகரின் கல்வெட்டு, சமுத்திர குப்தரின் அலகாபாத் தூண் கல்வெட்டு மற்றும் பிற கல்வெட்டுகள்.

b) பண்டைய நாணயங்கள், முத்திரைகள்

c) நினைவுச் சின்னங்கள்

d) வாழ்க்கை அடையாளங்கள்

e) சிற்பங்கள்

f) ஓவியங்கள்

g) பழமைச் சின்னங்கள்

h) சமண இலக்கியங்கள்.

i) அறிவியல் நூல்கள்

பண்டைக்கால இந்தியாவின் வரலாற்றை ஆய்வு செய்பவர் தொல்பொருள் நிபுணராகவும், கல்வெட்டு வல்லுனராகவும் மேதையாகவும் இருக்க வேண்டும்.

# சிந்து சமவெளி நாகரிகம்.

## நகர நாகரிகம்

5000 ஆண்டுகளுக்கு முன்பு சிந்து நதிக் கரையில் ஒரு நன்கு வளர்ந்த நகர நாகரிகம் செழிப்போடு வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தது என்பது வரலாற்று உண்மை 1920களில் தான் தெரிய வந்தது.

## கண்டுபிடிப்பாளர்கள்

ஜான் மார்ஷல், R.D பானர்ஜி, மார்டிமர் வீலர். கன்னிங்காம்.

## மொகஞ்சதாரோ நகர நாகரிகம்

a) இறந்தோர் மேடு, b) பெரிய நகரம் c) நகரமைப்புத் திட்டம் d) களஞ்சியங்கள் e) குளியல் குளம், f) பொதுக் கூடங்கள் g) கோபுரங்கள் h) கலைப் பொருட்கள் i) செப்புச் சிலை, j) ஆண் சிலை

## அரசியல் அமைப்பு

1) நகர நிர்வாகம் 2) மத்திய திட்டக்குழு

## பொருளாதார அமைப்பு.

1) வேளாண்மை 2) தொழில், 3) உள்நாட்டு வர்த்தகம் 4) வெளிநாட்டு வர்த்தகம்.

## சமுதாய அமைப்பு

1) சாதிமுறையற்ற சமுதாயம் 2) நகரவாசிகள் 3) ஆடை நகை அலங்காரம் 4) உல்லாசிகள் 5) கலையுணர்வு மிக்கவர்கள் 6) பண்பாட்டு பக்குவம் உடையவர்கள் 7) செம்பின் உபயோகம் அறிந்திருந்தனர்

## வேத காலம் (கி.மு 1500 - கி.மு 600)

வேதங்கள் — ரிக், யஜுர், சாம, அதர்வண வேதம்
பிராமணங்கள், ஆரண்யங்கள், உபநிடதங்கள்

வேதகால வாழ்வியல் - கிராமப்புறங்களில் வாழ்ந்தனர்.

அரசியல் அமைப்பு,

அரசாட்சி இருந்தது. மன்னருக்கு அறிவுரையும், ஆலோசனையும் கூற அமைச்சர்கள் இருந்தனர்

சபா சமிதி,

இந்த இரண்டு சபைகள் ராஜனின் அதிகாரத்துக்கு கடிவாளங்களாக இருந்தன.

நிர்வாக நிலை

கிராம நிர்வாகம், சேனானி படைத் தளபதியாக இருந்தார்.

சட்டம் ஒழுங்கு நிலை - தண்டனை குற்றங்களுக்கு ஏற்ப வழங்கப்பட்டது.

பொருளாதார நிலை

மேய்ச்சல் பொருளாதாரம், பண்டமாற்று முறை, கிராமப் பொருளாதாரம், நெசவுத் தொழில், மண்பாண்டத் தொழில் மற்றும் பல்வேறு தொழில்கள் இருந்தன.

சமுதாய நிலை

கூட்டுக் குடும்பம், விதவை மறுமணம், ஆண்களை சார்ந்த சமுதாயம், கோதுமை, பார்லி, முக்கிய உணவுப் பொருள், ஜாதி முறை வழக்கத்தில் இருந்தது.

சமயநிலை

வேத கால மக்கள் இயற்கையை வழிப்பட்டனர்.

## புத்த மதம்.

புத்தரின் வாழ்க்கை (கி.மு 567 - கி.மு 487)

புத்த சமயம் கி.மு 6ம் நூற்றாண்டில் தோன்றியது.

நான்கு உண்மைகள்

1) துன்பம் 2) துன்பத்தின் தோற்றம் 3) துன்பம் துடைத்தல்
4) துன்பத்தை துடைக்கும் வழி

நேர்மையான எண்வகை வழிகள்

1) நன்கு அறிந்து கொள்ளல் 2) நல்ல எண்ணம் 3) நல்ல பேச்சு 4) நல்ல செயல் 5) நல்ல வாழ்க்கை. 6) நல்ல முயற்சி 7) நல்ல உள்ளம் 8) நல்ல மன ஒருமைப்பாடு

ஐந்து வழிகள்

1) எந்த உயிருள்ள பொருளையும் கொல்லாதே
2) கொடுக்கப்படாததை எடுக்காதே
3) பொய் பேசாதே
4) மது அருந்தாதே
5) ஒழுக்க நெறி தவறாதே

நிர்வாண நெறி, ஒழுக்கமே சமயம், கடவுள் கற்பனை. அஹிம்சை வழி.

புத்த சமயம் பின்னாளில் மகாயானம், ஹீனயானம் என்ற இரு பிரிவாக பிரிந்தது.

## சமண சமயம்

சமண சமயம் கி.மு 6ம் நூற்றாண்டில் தோன்றியது. வர்த்தமானரின் வாழ்க்கை கிமு 539 - கிமு 467

வைசாலியில் பிறந்தார், யசோதா என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டார் துறவறம் மேற்கொண்டார். சங்கத்தை அமைத்தார். இவர் 24வது தீர்த்தங்கரர் ஆவார்.

மூன்று மாணிக்கங்கள்

1) நன்னம்பிக்கை 2) நல்லறிவு 3) நன்னடத்தை

ஐந்து விரதங்கள்

1) அகிம்சை 2) வாய்மை 3) களவாமை 4) பிரம்மச்சரியம் 5) பொருள் பற்றின்மை

அகிம்சைக் கொள்கை

சமணதத்துவத்தின் சாரமாகும், மனிதர்கள் உயிர்கள் மட்டுமின்றி தாவரங்களுக்கும் தீங்கு செய்யலாகாது. பின்னாளில் சமண சமயம், ஸ்வேதம்பரர், திகம்பரர் என்ற இரு பிரிவாக பிரிந்தது.

மௌரியர் காலம் (கி.மு. 300 - கி.மு 200

வரலாற்றுச் சான்றுகள்,

கௌடில்யர் எழுதிய அர்த்தசாஸ்திரம், மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா, அசோகரின் கல்வெட்டு முக்கிய சான்றாகும்.

நிர்வாகம்,

மன்னராட்சி இருந்தது, சந்திரகுப்த மௌரியர் மௌரிய வம்சத்தை தோற்றுவித்தார்.

மந்திரி பரிஷத் - மந்திரி சபையின் பெயராகும்.

கண்காணிப்பாளர்கள் இருந்தனர். உள்ளாட்சி நிர்வாகம் இருந்தது. மக்கள் தொகை கணக்கெடுக்கப்பட்டது. படை ஆறு அங்கங்களை கொண்டிருந்தது. போர் அறம் பின்பற்றப்பட்டது. வலிமையான படை இருந்தது.

சந்திரகுப்த மௌரியரின் மகன் பிந்துசாரர் ஆவார். இவருடைய மகன் அசோகர் ஆவார்.

அசோகர் கி.மு 273 - கி.மு. 232

கல்வெட்டுகள்

அசோகரை பற்றி அறிந்து கொள்வதற்கு கல்வெட்டு-களே முதன்மையான சான்றாகும். இக்கல்வெட்டுகள் பாலி மொழியில் பிராகிருத வடிவில் இருந்தன.

கல்லாணைகள்

1) சிறிய கல்லாணைகள் 2) கல்தூண் ஆணைகள்

கல் தூண் ஆணைகள்

கல்லாணைகளைப் போன்றே கல்தூண் ஆணைகளும் புத்த தர்மத்தைப் பற்றியவை. அசோகர் தன்னை இறைவனின் பாசத்துக்குரியவன் (Devanampriya Priyadharshi) பிரியமான அரசன் என்றே கூறிக் கொள்கிறார்.

கலிங்கப் போர் கி.மு. 261

கலிங்கத்தை வெற்றி கொள்ளத் தீர்மானித்தார் அதன் விளைவே கலிங்கப் போர். கலிங்கப் போர் வெற்றி அசோகரின் வாழ்க்கையில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது.

அறநெறி

அசோகர் புத்தரின் விருப்பப்படி புலால் உண்ணுவதை நிறுத்தி விட்டார். புத்தரின் போதனைகளைப் பிறருக்குப் போதிப்பதற்குமுன் தன்னை முன்னுதாரணமாக்கிக் கொண்டார்.

மூன்றாவது மாநாடு

அசோகரின் ஆட்சிக் காலத்தில் புத்தமத மூன்றாவது புத்த மத மாநாடு புத்தத் துறவிகளிடையே கட்டுப்பாடு சீர்கேட்டினைத் தெளிவாக வெளிப்படுத்தியது. இம்மாநாடு (கி.மு 240) பாடலிபுத்திரத்தில் நடைபெற்றது. அசோகர் புத்தரின் போதனைகளின் சாரத்தை உள்வாங்கிக் கொண்டு, தன்வயப் படுத்தி மக்கள் எளிதில் புரிந்து

கொண்டு மனப்பற்றுக்குரிய தான தர்மத்தை வெளியிட்டார். இதுவே அசோக தர்மம் என்றழைக்கப்படுகிறது.

## மௌரியரின் பொருளாதார நிலை

விவசாயம், நெசவுத் தொழில், கப்பல் கட்டுதல், மதுபானத் தொழில், மண்பாண்டத் தொழில், தந்தத் தொழில், கரும்பாலை, மாவுத் தயாரித்தல், மீன் பிடித்தல், எண்ணெய் எடுத்தல், ஜவுளி, பருத்தியாடை, பட்டுத்துணி, தோல் வேலை, கல்வெட்டு, உலோக உருக்கு, உற்பத்திப் பொருள் போக்குவரத்து ஆகியவை லாபகரமான தொழில்களாக இருந்தன. உள்நாட்டு வெளிநாட்டு வாணிபம் நடைபெற்றது.

## சமுதாய நிலை

சமுதாய அமைப்பு நிலையில் பிராமணர்கள் புரோகிதர்களாக இருந்தனர். பெண்களின் நிலை ஆண்களுக்கு கீழ்ப்படிந்து இருக்க வேண்டியதாக இருந்தது. பரத்தையர்களை பாதுகாப்பதற்காக அரசாங்க மேற்பார்வையாளர் இருந்தார். பரத்தையரிடமிருந்து வரி வசூலிக்கப்பட்டது.

## தட்சசீலப் பல்கலைக் கழகம்

மௌரியர் காலத்தில் இப்பல்கலைக்கழகம் சிறப்புற்று உலகப் புகழ் பெற்றது. இங்கு உயர்கல்வி மட்டும் அளிக்கப்பட்டது.

## கலை

இது புத்தர் சம்மந்தப்பட்ட கலையாகும். புத்தரின் எச்சங்கள் பட்ட இடங்களில் எல்லாம் அசோகர் ஸ்தூபங்களை எழுப்பினார். சாஞ்சி ஸ்தூபம், சாரநாத் தூண், குகைகள், அரண்மனைகள் கலை கட்டடக்கலைக்கு சிறந்த உதாரணமாகும்.

மௌரியர் கால ஆட்சிமுறை

முடியாட்சி - அதிகார குவியல் முறை முடியாட்சியாகும். மந்திரிபரிஷத்தும், ஆணைகளை நிறைவேற்ற அதிகாரிகளும் அலுவலர்களும் இருந்தனர்.

மாகாண நிர்வாகம்

நான்கு பெரும் மாகாணங்கள் பிரிக்கப்பட்டன.

மாவட்ட நிர்வாகம்

ஒவ்வொரு மாகாணமும் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அதற்குரிய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. நகர நிர்வாகி நகரகா என்றழைக்கப்பட்டார்.

மாநகர நிர்வாகம்

பாடலிபுத்திரம், தட்சசீலம், உஜ்ஜையினி, கௌசாம்பி, தோசாலி, சுவர்ணகிரி, சமாபா போன்ற மாநகரங்களுக்கெனத் தனி நிர்வாக அமைப்புகள் இருந்தன. பாடலிபுத்திரத்தை 30 உறுப்பினர்கள் கொண்ட 6 மன்றங்கள் நிர்வகித்தன. ஒவ்வொரு மன்றத்திலும் 5 உறுப்பினர்கள் இருந்தனர்.

நீதி நிர்வாகம்

தர்மஸ்திய நீதிமன்றம் சொத்துரிமை, திருமணம், மணவிலக்கு, உயில்கள், வீட்டுமனைகள், நீர் உரிமை, ஒப்பந்தங்கள், வற்றல் தாக்கல், போன்றவை சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரித்து நீதி வழங்கியது.

இராணுவம்

மௌரிய இராணுவம் காலாட்படை, குதிரைப்படை, ரதப்படை, போர்யானைப்படை, கடற்படை போன்றவற்றைக் கொண்டிருந்தது.

ஒற்றர் முறை

ஒற்றர் முறை வழக்கத்தில் இருந்தது.

# குஷாண வம்சம்

## கனிஷ்கர் கி.பி 78 – கி.பி 120

கனிஷ்கர் புருஷபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தார். கனிஷ்கர் அவரின் வெற்றியின் உச்சத்தில் இருந்த பொழுது சாக சகாப்தத்தை ஏற்படுத்தினார். கனிஷ்கர் புருஷபுரத்திலிருந்து இப்பேரரசை ஆட்சி செய்தார்.

### கனிஷ்கரின் சமயக் கொள்கை

கனிஷ்கர் அசோகரைப் போன்று புத்த மதத்துக்கு மாறியவர். புத்தர் காட்டிய பாதையில் பயணித்தவர்.

### கனிஷ்கர் கால புத்த மதம்

இரு பிரிவுகள்

கனிஷ்கர் காலத்தில் புத்த மதம் இரண்டாகப் பிளவுபட்டு ஹீனயானம், மகாயானம் என்ற இரண்டாகப் பிரிந்தது.

### ஹீனயானம்

ஹீனயானம் என்றால் சிறிய பாதை என்று பொருள். அதாவது புத்தரை மனிதனாக ஏற்றுக் கொண்டு அவர் காட்டிய உண்மைகளையும், அறிவுரைகளையும் மாறாமல் பின்பற்றியவர்கள் ஹீனயானிகள் என்று அழைக்கப்பட்டனர்.

### மகாயானம்

மகாயானம் என்றால் பெரிய பாதை என்று பொருள். இவர்கள் புத்தரை அவதாரமாக்கினர். இறைவனின் திருஅவதாரமாக்கினர். புத்தரை கடவுளாக்கி வழிபட்டனர். நம்பிக்கை மிகுந்திருந்த பரந்தன்மை உடையது.

## நான்காவது புத்த மன்ற மாநாடு

கனிஷ்கர் காலத்தில் நான்காவது புத்த மாநாடு நடைபெற்றது. இதில் 500 துறவிகள் பங்கேற்றனர். வசுமித்திரர் இம்மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். இந்த மாநாட்டிற்கு வசுமித்திரர் தலைமை தாங்கினார். இந்த மாநாட்டின் முக்கிய நோக்கங்கள் இரண்டு 1) புத்த மதத்தின் 18 பள்ளிகளிடையே நிலவிய கருத்து வேறுபாடுகளைக் களைதல் 2) பௌத்த விளக்க உரைகளைத் தொகுத்தல்.

## கலாச்சார வளர்ச்சி

குஷாணர் கால கலாச்சார வளர்ச்சி பிரமிக்கத்தக்கது. இந்திய கிரேக்க கலையான காந்தாரக் கலை கனிஷ்கர் காலத்தில் வேர் விட்டு வளர்ந்தது. காந்தாரம் மட்டுமின்றி சாரநாத், அமராவதி, மதுரா போன்ற நகரங்களும் கலைக் கூடங்களாக காட்சியளித்தன.

## காந்தாரக் கலை

கனிஷ்கர் ஆட்சிக்கால சிறப்புகளில் ஒன்று காந்தாரக் கலை சிறப்பாகும். இம்மாமன்னர் காலக் கட்டடங்களை அழகுபடுத்துவதற்காகக் கிரேக்க கலைஞர்கள் நியமிக்கப்பட்டனர். புத்தரின் உருவங்கள் பல்வேறு சின்னங்களாக வடிவமைக்கப்பட்டன. புத்தர் கிரேக்க கடவுளான அப்பல்லோ போன்று காட்சியளித்தார். புத்தக் கதைகள் கிரேக்க கலை வடிவம் பெற்றன. இத்தகைய இந்திய - கிரேக்க பாணிக் கலையே காந்தாரக் கலை என்று அழைக்கப் படுகிறது.

History of India UP to 1206 C.E  Code no 18K1H01

குப்தர் காலம் கி.பி 300 – கி.பி. 600

அதாரங்கள்

புராணங்கள், கல்வெட்டுகள் குப்தர்களை பற்றி அறிந்து கொள்ள உதவுகிறது. நாணயங்கள் மற்றும் குப்தர் கால முத்திரைகள் மூலம் அரசின் நடவடிக்கைகளை அறிந்து கொள்கிறோம்.

இலக்கியம்

சாகுந்தலம், மேகதூதம், ரகுவம்சம், மாளவிகாக்னிமித்ரம், ரிதுசம்ஹாரம் குமாரசம்பவம் ஆகியவை இலக்கிய படைப்பாகும்.

அரசியல் நாடகங்கள்

விசாகதத்தரின் தேவசந்திரகுப்தம் முக்கிய அரசியல் நாடக நூலாகும்.

அயல்நாட்டு பயணியின் குறிப்புகள்

சீனப் பயணி

இ பாகியான் இரண்டாம் சந்திரகுப்தர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவுக்கு வந்தார். இவர் தன்னுடைய குறிப்புகளில் குப்தர் காலத்தில் இலவச மருத்துவமனைகள், அறக்கட்டளைகள். விலங்குகளையோ, பறவைகளையோ கொல்வதில்லை என்பது போன்ற பல தகவல்களை கூறியுள்ளார்.

குப்தர் கால நிர்வாகம்

மைய அரசாங்கம், யுவராஜா. மந்திரி மண்டலம். போன்றவை இருந்தன. சுருக்க கூறின் குப்தர் கால மைய அரசு, அரசு தர்மத்தின் அடிப்படையில் அமைந்த அதிகார வர்க்க ரீதியான கட்டுப்பாட்டு ஆட்சியாகும்

மாகாண நிர்வாகம். மாவட்ட நிர்வாகம். கிராம நிர்வாகம், நீதி நிர்வாகம் போன்றவை இருந்தன.

# குப்தர் கால பொருளாதாரம்

பொருளாதாரத்தின் அடிப்படை விவசாயம். கனிம வளங்கள் நிறைந்திருந்தன. நீர்வழிப் போக்குவரத்து நடைபெற்றது. இறக்குமதி துறைமுக நகரங்களாகப் பயன்பட்டன. தொழில் குழுக்கள் சிறப்படம் பெற்றிருந்தன. வர்த்தகர்கள், கைவினைஞர்கள் ஆகியோர்க்கு தொழில் வாரியாக குழுக்கள் இருந்தன.

குப்தர் காலத்தில் நாணயங்கள் தங்கம் வெள்ளி அடிப்படையாகப் பயன்படுத்தப்பட்டன. சிறு வியாபாரம் பண்டமாற்று முறையால் நடைபெற்றது.

## சமுதாய நிலை

### சாதிமுறை

சாதிமுறை குறிப்பாகப் பிறப்பின் அடிப்படையிலான நான்கு சாதிப்படி முறை அமைப்பு இருந்தது.

### பிராமணர்கள்

பிராமணர்கள் சமுதாயத்தில் உயர்ந்த இடத்தில் இருந்தனர்.

### சத்திரியர், வைசியர், சூத்திரர்

இவர்கள் முறையே இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் நிலையில் இருந்தனர்.

### சண்டாளர்கள்

இவர்கள் தீண்டத்தகாதவர்கள் என்ற முத்திரை குத்தப்பட்டு சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்கப் பட்டனர்.

### அடிமைகள்

குப்தர் காலத்தில் அடிமை முறை

வழக்கத்தில் இருந்தது.

## குடும்பம், பெண்கள்

சமுதாயத்தின் அடித்தள அமைப்பாக இருந்தது. குழந்தை திருமணம் வழக்கத்தில் இருந்தது. பெண்கள் சிறுமைப்படுத்தப்பட்டனர்.

## சமயநிலை

பிராமண சமயம் தலை தூக்கியது. பிராமண சமயத்தின் மறுமலர்ச்சி எனலாம்.

சைவ வைணவ சமயங்கள்

சிவனையும், விஷ்ணுவையும் முதன்மை தெய்வமாக வழிபட்டனர் வைணவமே மேலோங்கி இருந்தது

## புத்த சமயம்

புத்த சமயத்தை அரசர்கள் ஆதரித்தாலும் பிராமண சமயத்தின் மின்னல் வேக வளர்ச்சியால் பௌத்த சமயம் தளர்ச்சியுற்றது.

## சமண சமயம்

சமண சமயம் கிழக்கிந்தியாவிலும், தென்னிந்தியாவில் காணப்பட்டது.

## கலைகள்

### கல்வி

வேதக் கல்வி பிராமணக் குழந்தைகளுக்கு மட்டும் கற்பிக்கப்பட்டது. எனவே குப்தர்கால கல்விச் சிறப்புக்கு ஒரு காரணம் பௌத்தர்களும், சமணர்களுமேயாவர்

### மொழி

சமஸ்கிருதத்தின் செல்வாக்கு

## சமஸ்கிருதத்தின் செல்வாக்கு

குப்தர் காலத்தில் பாலி, பிராகிருதம் மற்றும் அட்டாரு மொழிகளுக்கு பதில் சமஸ்கிருதம் மீண்டும் முக்கியத்துவம் பெற்றது.

## மறுமலர்ச்சி

இந்து சமயம், மற்றும் இலக்கியத்தின் மறுமலர்ச்சி காலம் என்று குப்தர் காலம் அழைக்கப்படுகிறது.

## பஞ்சதந்திரக் கதைகள்

உலக பிரசித்திப் பெற்ற பஞ்சதந்திரக் கதைகள் குப்தர் காலத்தில் எழுதப்பட்டவையாகும்.

## புராணங்கள்

புராணங்கள் பல குப்தர் காலத்தில் எழுதப்பட்டதாகும்.

## அறிவியல்

குப்தர் கால அறிவியல் வளர்ச்சி அசாதாரணமானது. வியப்புக்குரியது. மருத்துவம், கணிதம், வானவியல் துறைகளில் மிகுந்த வளர்ச்சி ஏற்பட்டது.

வராகமிகிரரின் பஞ்சசித்தாந்தம் ஐந்து வானவியல் முறைகளை விளக்குகிறது.

வாகபட்டரின் அஷ்டாங்க சம்கிரகம் எட்டு வகை மருத்துவ முறைகளை விவரிக்கிறது.

## அறிவியல் சாதனையாளர்கள்

### ஆரியபட்டர்

இவர் இந்தியாவின் முதல் கணித வானவியல்

ஆற்பன்னர். இவரது இருபெரும் புகழ்மிக்க நூல்கள் 1) ஆரியபாட்டியா 2) ஆரிய சித்தாந்தம்.

## பிரம்மகுப்தர்

ஆரியபட்டருக்குப் பின் வந்த பிரம்மகுப்தர் புவிஈர்ப்பு விசைக் கோட்பாட்டை உறுதி செய்தார்.

## கலைகள்

### கட்டடக்கலை

குப்தர் கால கட்டடங்கள் இரு வகைப்படும் 1) இந்து கோயில்கள் 2) பௌத்த கோயில்கள் திருமாலுக்கும், சிவனுக்கும் கட்டப்பட்ட கோயில்கள் புகழ்பெற்றவை. குகைக் கோயில்கள் அந்த கட்டடக் கலையின் புதிய வெளிப்பாடாகும்.

### சிற்பக்கலை

குப்தர்கால சிற்பக்கலையின் சிகரமாகத் திகழ்வது பௌத்த சிற்பக்கலையேயாகும். டெல்லியருகுள்ள தேனிரும்பால் உருவாக்கப்பட்ட 23 அடி 8 அங்குலமுள்ள 6 டன் எடையுள்ள இரும்புத்தூண் உலக உருக்குக்கலை அதிசயமாகும். புத்தரின் சிலைகள், சிவபெருமானின் சிற்பங்களும், திருமாலின் பத்து அவதாரங்களை உருவகப்படுத்திய சிலைகளும் சிற்பக்கலை படைப்பாகும்.

### ஓவியக்கலை

குப்தர்கால ஓவியக்கலை மூவகைப்படும் 1) குவாலியரிலுள்ள பாக் குகைகள் 2) அஜந்தா குகை ஓவியங்கள் 3) இலங்கையில் காணப்படும் சிகிரியா ஓவியங்கள்.

## நாளந்தா பல்கலைக்கழகம்

நாளந்தா பல்கலைக்கழகம் முதலாம் குமார குப்தர் காலத்தில் கட்டப்பட்டது. இப்பல்கலைக்கழகம் உலகின் தலைசிறந்த மாணவர்கள் தங்கிப் பயிலும் பல்கலைகழகமாக திகழ்ந்தது. மூன்று மாளிகைகளைக் கொண்ட நூலகத்தில் பல்லாயிரக்கணக்கான ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டன.

## குப்த பேரரசின் அழிவு

திறமையற்ற அரசர்கள், குலத்துரிமை, சிற்றரசர்கள், பொருளாதார பலவீனம், புத்த மதச் செல்வாக்கு, மற்றும் ஹூணர் படையெடுப்பு இக்காரணங்களால் குப்தப் பேரரசு வீழ்ச்சியுற்றது.

கி.பி 606 கி.பி 647

## ஹர்ஷர் காலம் ~~கி.பி~~ ~~606~~ கி.பி ~~647~~

## வரலாற்றுச் சான்றுகள்

இலக்கியச் சான்றுகளோ மற்றும் தானச் சான்றுகளைப் பயன்படுகின்றன. 1) பாணரின் ஹர்ஷசரிதம் 2) யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகள் 3) ஹர்ஷரின் நாடகங்கள்

## யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகள்

இந்தியா வந்த இவர் சமஸ்கிருத மொழியை கற்றார். முக்கிய புத்த ஆவணமான மகாயான இவருக்கு கிடைத்தது. காஞ்சியில் பௌத்த மடங்களும் 6,000 துறவிகளும் இருந்தனர். இவர் காஞ்சியிலிருந்து புறப்பட்டு கைபர் கணவாய் வழியாக புருஷபுரத்தை வந்தடைந்தார். புத்தர் வாழ்ந்த புனித இடங்களை பார்வையிட்டார். ஹர்ஷரின் அவைக்கு வந்தார். ஹர்ஷர் அவரை மரியாதையுடன் நடத்தினார். ஹர்ஷப் பேரரசில் 8 ஆண்டுகள் தங்கி இருந்தார். இவருடைய குறிப்பு

-கொண்டிருந்த ஹர்ஷரது நிர்வாகம் மற்றும் ஏழாம் நூற்றாண்டைப் பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது.

## ஹர்ஷரின் படையெடுப்புகள்

வங்காளத்தை வெற்றிக் கொள்ளுதல், மாளவத்தை கைப்பற்றல், வல்லபியின் மீது வெற்றி, சிந்து படையெடுப்பு, புலிகேசியுடன் போர்

## ஹர்ஷரும் புத்தமதமும்

ஹர்ஷர் தனது புத்த சமய வாழ்க்கையை ஹீனயான மதத்தில் துவங்கி மகாயான மதத்தவரானார். சமய சகிப்புத் தன்மையை கடைப்பிடித்தார். இவர் மதம் மாறினாரேயன்றி மக்களை இவர் சார்ந்த மதத்துக்கு மாற்றவில்லை. ஹர்ஷரின் மதக்கொள்கை செங்கோன்மையின் வெளிப்பாடாகும்.

## ஹர்ஷரின் மதத்தொண்டின் சிறப்புக் கூறுகள்

1) உயிர் வதை தடை செய்யப்பட்டது.
2) தூபிகள் நிறுவப்படல்
3) வசதியான ஓய்வுவிடுதிகள் கட்டப்பட்டன.
4) பௌத்த மடங்கள் தோற்றுவிக்கப்பட்டன
5) ஐந்தாண்டுக்கு ஒரு முறை பௌத்த மாநாடு நடத்தப்பட்டது.
6) பௌத்த மடங்கள் அறக்கல்விக் கேந்திரங்களாகவும் செயல்பட்டன.

## கன்னோசி மாநாடு கிபி 643

சீனப் பயணி யுவான் சுவாங்கை பாராட்டுவதற்காகவும் சமயக் கொள்கையை விவாதிப்பதற்காகவும் ஹர்ஷர் கன்னோசியில் ஒரு மாபெரும் மாநாட்டைக் கூட்டினார். கன்னோசி மாநாட்டில் 20 அரசர்கள், 1000 நாளந்தா பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள்

3000 ஹீனயான, மகாயான பௌத்த துறவிகள், 3000 பிராமண சமய அறிஞர்கள் பங்கேற்றனர்.

இம்மாநாடு 23 நாட்கள் நடைபெற்றது. மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய யுவான் சுவாங் மகாயான புத்த சமயத்தின் அருமை பெருமைகளை விளக்கினார்.

அலகாபாத் பேரவை. கி.பி 643

ஹர்ஷர் ஐந்தாண்டுக்கொருமுறை சமயப் பேரவையைக் கூட்டி அனைத்து சமயங்களைச் சேர்ந்தவர்களுக்கும் பரிசுகளும் கொடுப்பது வழக்கம். யுவான் சுவாங் பங்கு கொண்டார். அனைத்து சமயங்களையும் சேர்ந்த 5,00,000 பேர் பங்கேற்றனர்.

அலகாபாத் பேரவை 75 நாட்கள் நடைபெற்றது. அனைத்து சமய கடவுள்களுக்கும் வழிபாடுகள் நடத்தப்பட்டன. தன்னிடமிருந்த அனைத்தையும் பரிசாக கொடுத்து விட்டு முற்றும் துறந்த முனிவரானார்.

ஹர்ஷர் கால நிர்வாகம்.

மைய அரசின் கட்டுப்பாட்டோடு மாகாணங்களும் கிராமங்களும் சுயாட்சியாக செயல்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன. மன்னருக்கு ஆலோசனை கூற அமைச்சரவை இருந்தது.

ஓருதிகள் கட்டப்பட்டன. இவ்வாருதிகளில் தங்கி நிர்வாகத்தை மேற்பார்வையிட்டார். மக்கள் திருடர் பயமின்றிப் பாதுகாப்போடு வாழ்ந்தனர்.

நீதி நிர்வாகம்

கருணையும் கண்டிப்பும் ஆட்சி நாணயத்தின் இரு பக்கங்களாகும். யுவான் சுவாங் குற்றங்களை உறுதி)

செய்ய நான்கு முறைகள் பின்பற்றப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார் 1) நீர் முறை
2) நெருப்பு முறை
3) சீமை முறை
4) நஞ்சு முறை

உடல் உறுப்புகளை வெட்டுதல், மரண தண்டனை கொடுத்தல், நாடுகடத்தல், அபராதம் விதித்தல் போன்ற தண்டனைகள் கொடுப்பட்டன. தண்டனைகள் கடுமையாகவும், கொடூரமாகவும் இருந்தமையால் குற்றவாளிகள் குறைவாக இருந்தனர். குற்றங்கள் அரிதாக இருந்தன எனக் குறிப்பிட்டுள்ளார் யுவான் சுவாங்.

## ஆவணக் காப்பகம்

ஆவணங்களைச் சேகரிப்பதற்கும், அவற்றைப் பத்திரப்படுத்திக் காப்பதற்கும் ஆவணக் காப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். அதிகாரபூர்வமான ஆவணங்களும் கால அட்டவணைகளும் நீலோபது என்று அழைக்கப்பட்டன.

## பொருளாதார நிலை

யுவான் சுவாங்கின் குறிப்புகளிலிருந்து ஹர்ஷர் காலப் பொருளாதார நிலை பற்றிப் புரிந்து கொள்ள முடிகின்றது. சீனப் பயணி சென்ற இடங்களிலெல்லாம் மக்கள் மகிழ்ச்சியோடு காணப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

விவசாயம் செழிப்பாக இருந்தது. கோதுமை மக்களின் முக்கிய உணவுப் பொருளாக இருந்தது. தொழில்களை முறைப்படுத்துவதற்கு தொழிற்குழுக்கள் இருந்தன. தங்கம், வெள்ளி நாணயங்கள், சோழிகள்

சங்குகள் அணிகலனை பொருட்களை உருக்க வார்க்க பயன்படுத்தப்பட்டன.

வெளி நாட்டு வாணிபமும் சிறப்புற்று இருந்தது. தென் கிழக்கு ஆசிய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு இருந்தது.

## சமுதாய நிலை

நான்கு வகைச் சாதிமுறை வழக்கத்தில் இருந்தது. பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற பிரிவினர் இருந்தனர்.

இறைச்சிக் கடைக்காரர்கள், தோட்டிகள், தெருப்பெருக்குவோர், மீன்பிடிப்போர், கொலைக் குற்றவாளிகளை தூக்கிலிடுவோர் ஆகியோர் ஊருக்கு வெளியே வசித்தனர். வரதட்சணை வழங்கப்பட்டது. விதவை மறுமணமும், தந்தை வழி தாய்வழி நெருங்கிய உறவினர் திருமணமும் தடை செய்யப்பட்டன. விதவைகள் மொட்டையடிக்கப்பட்டனர். உடன்கட்டை ஏறல் வழக்கத்தில் இருந்தது. வயோதிகரும், தீராத நோயுற்றோரும் கங்கையில் மூழ்கடிக்கப்பட்டனர். இறந்தோரை அடக்கம் செய்ய மூன்று முறைகள் கையாளப்பட்டன. எரித்தல், ஆற்றில் விடுதல், காட்டில் வீசுதல்.

## சமய நிலை

### பௌத்த சமயம்

ஹர்ஷர் காலத்தில் பௌத்த சமயம் தனி செல்வாக்கு பெற்றிருந்தது.

### சமண சமயம்

சமண சமயம் சுதந்திரமாக இயங்கியது. இருந்தாலும் அதன் செல்வாக்கு குறைந்து காணப்பட்டது.

## பிராமண சமயம்

பிராமணத் தலைவர் ஹர்ஷரின் ஆட்சிக்கு எதிராகச் செயல்பட்டார்கள். ஹர்ஷர் பிராமண சமய-த்துக்கு தனி மரியாதை வழங்கினார்.

## ஹர்ஷரின் படைப்புகள்

ஹர்ஷர் எழுதிய ரத்னாவளி, பிரியதர்சிகா, நாகாநந்தம் என்றவை இப்பெரும் சமஸ்கிருத நாடகங்-களாகும்.

## பாணர்

பாணர் ஹர்ஷரின் பேரவையில் இருந்தார் இவர் ஹர்ஷசரிதத்தை எழுதியதோடு மட்டுமின்றி காதம்பரி என்ற காதல் காவியத்தையும் படைத்தார்.

## கல்வி நிலை

ஹர்ஷர் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தார். இவர் பௌத்த மடாலயங்களை வெகுவாக ஊக்குவித்தார். இவ்விடத்தில் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டது.

மாணவர்களுக்கு ஐந்து வயதிலிருந்து கல்வி கற்பிக்கப்பட்டது. புலமை மிக்க ஆசிரியர்கள் இருந்தனர்.

# நாளந்தா பல்கலைக்கழகம்

## தோற்றம், வளர்ச்சி

இப்பல்கலைக்கழகம் குப்தர் காலத்தில் முதலாம் குமாரகுப்தர் காலத்தில் துவக்கப்பட்டது. இப்-பல்கலைக்கழகம் ஹர்ஷர் ஆட்சிக் காலத்தில் உச்ச கட்ட வளர்ச்சியடைந்தது. சீனா, திபெத், பர்சியா,

பாரசியா, கிரேக்கம் போன்ற நாடுகளிலிருந்து மாணவர்கள் வந்து இப்பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கற்று ஆராய்ச்சி செய்தனர்.

## பல்கலைக்கழகம்

நாளந்தா பல்கலைக்கழகம் உலகின் தலைசிறந்த மாணவர்கள் தங்கிப் படிக்கும் பல்கலைக்கழகமாக திகழ்ந்தது. பல்கலைக்கழக வளாகத்தில் எட்டு தனி கட்டடத் தொகுதிகளும், எட்டு வழிபாட்டுத் தலங்களும், தியான மண்டபங்களும், நூலகமும், வகுப்பறைகளும் இருந்தன. மூன்று வளாகங்களைக் கொண்ட நூலகத்தில் பல்லாயிரக்கணக்கான ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டன. இடையிடையே எழில்மிகு குளங்களும், மரங்களும் காட்சியளித்தன. 10 நீச்சல் குளங்கள் இருந்தன. இப்பல்கலைக்கழகம் கட்டடக் கலையின் தலைசிறந்த படைப்பாகக் கருதப்பட்டது.

## பேராசிரியர்கள்

பேராசிரியர்கள் பண்டிதர்கள் என்று அழைக்கப்பட்டனர். திங்நாகா, ஸ்திரமதி, தர்மபாலர், சீலபத்திரர் போன்ற பெரும் புகழ் பெற்ற பேராசிரியர்கள் இப்பல்கலைக்கழகத்தில் பணியாற்றினர்.

## மாணவர்கள்

நாளந்தா பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் திறமையின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மாணவர்கள் கடுமையான நுழைவுத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

## நூலகம்

ஹர்ஷர் ஆட்சிக் காலத்தில் உலகிலேயே

மிகப்பெரிய நூலகம் இருந்தது. இந்த நூலகம் தீயினால் அழிக்கப்பட்டிருந்தது.

1) ரத்னசாகரம் 2) ரத்னோததி 3) ரத்னரஞ்சகா இந்நூலகத்தில் பல்லாயிரக்கணக்கான சுவடிகள் முறையாகப் பாதுகாக்கப்பட்டன.

பாடத்திட்டம்

இது சமயம் சார்ந்த, சமயம் சாராத பாடத்திட்டங்களை உள்ளடக்கியது. மகாயானம், ஹீனயானம், வேதங்கள், தர்க்கவியல், இலக்கணம், யோகம், மருத்துவம், வானவியல், தந்திரம், கலைகள் குறிப்பாக உருவச்சிலைக் கலை, சித்திரம், நுண்பொருளியல் ஆகியவை பாடத்திட்டத்தில் இடம்பெற்றிருந்தன.

பயிற்று முறை

ஹர்ஷர் காலத்தில் நாளந்தா பல்கலைக் கழகத்தில் துவக்கக் கல்வி, இடைநிலைக் கல்வி, உயர் கல்வி அளிக்கப்பட்டது.

சாதவாகனர்கள் கலாச்சாரத்திற்கு அளித்த கொடைகள்.

கலை

சாதவாகனர்கள் கல்விக்கு சிறப்பிடம் கொடுத்தனர். சாதியும் சமயமும் இணக்கத்திலிருந்தன. இது சாதவாகனர் கால இலக்கியத்தில் பிரதிபலித்தது. சாதவாகன மன்னர்கள் பிராகிருத மொழியின் பாதுகாவலர்களாக இருந்தனர். சாதவாகன மன்னர் ஹாலா சிறந்த கவிஞர். இவரது 700 காமசக் கவிதைகள் அடங்கிய தொகுப்பான சத்தசாய் அல்லது காதா சப்தசதி பின்னர் இந்த பிராகிருத, சமஸ்கிருத காதல் கவிதைகள் தொகுப்பிற்கு

முன் மாதிரியாக இருந்தன. அரசவைக் கவிஞர் ரவி வத்சலா என்று அழைக்கப்பட்டாள். குமாரிலா, போட்மசா, பாமாகா போன்ற அறிஞர்கள் புகழ் பெற்றிருந்தனர்.

சாதவாகனர் கால கலை வளர்ச்சிக்கு புத்த மதத்தின் பங்களிப்பு மகத்தானது. கோயில்கள், மண்டபங்கள், குகைகள், தூண்கள் போன்றவை கட்டடக் கலைக்கும், சிற்பக் கலைக்கும், ஓவியக் கலைக்கும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். மறைவான குகை கலைக் கூடமாகக் காட்சியளிக்கிறது

## வாதாபி சாளுக்கியர்
(5th to 8th century)

தக்காணத்தை கைப்பற்றிய சாளுக்கியர் தங்களுடைய தலைமையகத்தை வடக்கு கரைகளில் வாதாபி அமைத்து கொண்டனர். இரண்டாம் புலிகேசி காலத்தில் ஐஹோல் கல்வெட்டு பயன்படுகிறது.

முதலாம் புலிகேசி (கி.பி 547 - 567) கீர்த்தி வர்மர் கி.பி 567 - கி.பி 598. மங்களேசர் கி.பி 598 - கி.பி 608 இரண்டாம் புலிகேசி கி.பி 608 கி.பி 642 முதலாம் விக்கிரமாதித்தன் கி.பி 655 - கி.பி 680 இரண்டாம் விக்ரமாதித்தர் கி.பி 733 - கி.பி 746. இரண்டாம் கீர்த்தி வர்மன் கி.பி 746 - கி.பி 753.

**கட்டடக்கலை:** ஆரம்ப கால சாளுக்கியர் கட்டடக்கலைப் பாணி ஐஹோலில் காணப்படுகிறது. நாகரா, வேசரா மற்றும் திராவிட கலைப் பாணியில் காணப்படுகிறது. குகைக் கோயில்கள் சிறப்புற்று இருந்தன. ஐஹோல் பாதாமியில் பல குகைக் கோயில்கள் காணப்படு

-கின்றன. ஐகோல் கோயில் நகரம். ஐகோல் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் மட்டும் 70 கோயில்களுக்கும் மேல் உள்ளன.

ஐகோல் நகரிலுள்ள கோயில்களில் கட்டடக்கலைக்குப் பெயர் பெற்றவை லதக்கான் என்றழைக்கப்படும் கோயில் துர்க்கை கோயில் உச்சிமல்ல குடிக் கோயில் சமணக் கோயில். லதக்கான் சூரியக் கடவுள் ஆலயம் தனித்துவமிக்க சுதந்திர கட்டுமானப் பணிக்குப் பிரதிநிதித்துவமாக உள்ளது.

பாதாமியில் உள்ள மாலகிட்டி சிவாலயம் நான்கு தூண் கொண்ட குடைவரைக் கோயிலாகும். இதில் மூன்று கூடங்கள் இந்து கடவுளர்களுக்கும் ஒன்று சமணக் கடவுளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஓவியக்கலை

பாதாமிச் சாளுக்கியரின் காலத்து ஓவியக்கலை பல குடைவரைக் கோயில்களில் காணப்படுகின்றது. குறிப்பாக வைணவக் குடைவரையில் திருமாலின் அவதாரங்கள் வரையப்பட்டுள்ளன. பாதாமி அரண்மனைச் சுவர்களில் இசைக் கலைஞர்களும், நடனமாதர்களும் பங்கேற்கும் நிகழ்ச்சி தத்ரூபமாகத் தீட்டப்பட்டுள்ளது.

## இராஷ்டிரகூடர்கள்

கி.பி 8ம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து தென்னிந்திய வரலாறு பாதாமி சாளுக்கியர், காஞ்சி பல்லவர், மதுரைப் பாண்டியர் ஆகியோருக்கிடையேயான மும்முனைப் போராட்டத்தின் வரலாறாகும். மேலை சாளுக்கியருடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் ராஷ்டிரகூடர்கள்.

தந்திதுர்கா கி.பி 745 - கி.பி 756 முதலாம் கிருஷ்ணன்

கி.பி 756 – 775 இரண்டாம் கோவிந்தர் கி.பி 775 – கி.பி 780 துருவர் கி.பி 780 – கி.பி 794 மூன்றாம் கோவிந்தர் கி.பி 794 – கி.பி 814 அமோகவர்ஷர் கி.பி 814 கி.பி 880 இரண்டாம் கிருஷ்ணர் கி.பி 880 – கி.பி 912 மூன்றாம் கிருஷ்ணர் கி.பி 939 – கி.பி 968. மேலை

## கட்டடக்கலை

தக்காண கட்டடக்கலை ராஷ்டிரகூடர் காலத்தில் உச்சநிலையை எட்டியது. இக்கால மராத்திய மாநிலத்தில் உள்ள எல்லோராவிலும், எலிபெண்டா குடைவரைக் கோயில்களின் மூலம் வெளிப்பட்டது. எல்லோரா கைலாசநாதர் கோயில் பரப்பளவில் பெரியது. இக்கோயில் திராவிட பாணியில் கட்டப்பட்டது. தசாவதாரக் குகைக் கோயில்களும் சிற்பக்கலைக்கும் புகழ் பெற்றவை.

எல்லோராவைப் போன்றே எலிபெண்டாவும் குடைவரைக் கோயில்களுக்குப் பிரசித்தி பெற்றவை. இங்குள்ள அர்த்தநாரீஸ்வரர், மகேசமூர்த்தி ஆகியோரின் சிற்பங்கள் சமநிலைக்கும், ஒழுங்குக்கும் அழகுக்கும் நிகரற்றவை.

## அராபியரின் சிந்துப் படையெடுப்பு கி.பி 712

### காரணங்கள்

அராபியரின் சிந்து படையெடுப்புக்கான முக்கிய காரணங்கள் நான்கு

1) கலீபாக்கள் இஸ்லாமை இந்தியாவில் பரப்புவதற்காக மேற்கொண்ட முயற்சி
2) சிந்துவை இஸ்லாமியப் பேரரசின் பகுதியாக்குவது

3) நெடுங்காலமாகத் தொடர்ந்து வந்த வர்த்தகத் தொடர்பை வலுப்படுத்தல்

4) அரேபிய வர்த்தகக் கப்பல்களை கடற்கொள்ளைக் -காரர்களிடமிருந்து காப்பாற்ற

<u>சிந்து கைப்பற்றப்படல்</u>

கி.பி எட்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் தேபல் கடற்கொள்ளைக்காரர்கள் இந்தியாவுக்கு வந்த அரேபியக் கப்பல்களைக் கொள்ளையடித்தனர். கலீபா சிந்து மன்னரை (தாஹிர்) கடற்கொள்ளையரைத் தடுத்து நிறுத்துமாறு கேட்டபொழுது கடற்கொள்ளையருக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று கூறிவிட்டார். கோப -மடைந்த கலீபா முகமது-பின்-காசிம் என்ற இளைஞனை சிந்து மீது படையெடுக்க அனுப்பி வைத்தார். இப்படையெடுப்பில் காசிம் அரேபியருக்கு வெற்றியை தேடித் தந்தான்.

<u>அரேபியரின் சிந்து மீது படையெடுப்பினால் ஏற்பட்ட விளைவுகள்.</u>

1. முதன் முறையாக சிந்து அரேபியரின் கீழ் வந்தது.
2. ஆக்கிரமிப்பாளர்கள் ஆட்சியாளர்களாயினர்.
3. அரேபியர்கள் இந்து பெண்களை திருமணம் செய்துக் கொண்டனர்.

4) இந்தியாவில் முதன் முறையாக இஸ்லாமியர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.

5) இரு வகை கலாச்சாரக் கலப்பு ஏற்பட்டது.

6) இந்திய முஸ்லீம்கள் இந்தியக் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாயினர்.

7) அரேபியர் எண்களையும், வானவியலையும், மருத்துவத்தையும் இந்தியாவிடமிருந்து கற்றனர்

8) பல இந்திய இலக்கியங்கள் அரேபிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன.

முகமது கஜினி (கி.பி 971 - கி.பி 1030)

கஜினியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த முகமது கி.பி 1000லிருந்து கி.பி 1027 வரையிலான 27 ஆண்டுகளில் 17 முறை இந்தியாவின் மீது படையெடுத்தார்

அல்பெருனி

இவர் எழுதிய நூல் கிதாப்-உல்-ஹிந்த் (Kitab-ul-Hind) இந்நூல் பண்டைய இந்திய வரலாறு மற்றும் பண்பாட்டைப் பற்றியது. இதில் இந்துக்கள் பற்றி மூன்று கருத்துகளை வெளியிட்டுள்ளார். இந்துகளுக்கு

1) வரலாற்று கண்ணோட்டம் இல்லை

2) வரலாற்று நிகழ்வுகளை கால வரிசைப்படிப் பதிவு செய்ய வேண்டும் என்ற அக்கறையில்லை.

3) தாங்கள் தான் அனைத்தையும் அறிந்தவர்கள் என்று எண்ணிக்கொண்டு பிறரது அறிவை இகழ்பவர்கள்

அதே சமயம் இந்துக்களை பாராட்டினார். இந்தியாவின் கணித மற்றும் வானவியல் அறிவாக்கத்தை அரபியர் மூலம் உலகறியச் செய்தார்.

வரலாற்றுச் சிறப்பு

கஜினி முகம்மது 17 முறை படையெடுத்தார் பல பகுதிகளைப் பிடித்தார். கஜினியிலிருந்து ஆட்சி

செய்தார். மக்களைக் கொடுமைப்படுத்தவில்லை. அனைத்துப் பகுதிகளிலும் நீதியை நிலை நாட்டினார்.

சிலை உடைப்பாளர் என்று பெயர் பெற்ற கஜினி முகமது கொடுமையான தாக்குதல்களைக் கையாண்டார். இவர் கோயில்களை இடித்ததும், குறிப்பாக சோமநாத் ஆலய சிலைகளை உடைத்ததும், உடைக்கப்பட்ட சிதைந்த சிலைப் பகுதிகளை அவமதித்ததையும் ஏற்றுக் கொள்ள இயலாது. முகமதுவின் மதமாற்றக் கொள்கையும் அக்கொள்கையை நடைமுறைப்படுத்திய விதமும் இவரது சமயப் பொறையின்மையின் வெளிப்பாடாகும்.

விளைவுகள்

1) இந்திய மன்னர்களிடையே நிலவிய ஒற்றுமையின்மை தெளிவாயின.

2) இதே போன்று இந்திய அரசர்களின் ராணுவ பிற்போக்குத் தன்மையும் பலவீனமும் வெளிப்பட்டது.

3) இவரது பல படையெடுப்புகள் இவருக்குப்பின் வந்தோர் படையெடுப்புகளுக்கு வழி வகுத்து விட்டன.

4) இந்தியாவில் இஸ்லாம் பேர் அரசு உருவாவதற்கு முதற்நிலையை உருவாயிற்று.

5) இந்தியாவின் பொருளாதாரத்திற்கும், கலைக்கும் பின்னடைவை ஏற்படுத்தின.

முகமது கோரி 1173 – கி.பி 1206

இவர் ஆப்கானிஸ்தானிலுள்ள கோர் பகுதியில் ஆட்சி செய்ததால் கோரி முகமது என்று அழைக்கப்பட்டார். அரசியல் முக்கியத்துவமும் கஜினியிலிருந்து கோரிக்கு மாறியது

## தரையின் போர் கி.பி 1191 - கி.பி 1192

தரையன் என்ற இடத்தில் அஜ்மீர் அரசன் பிரித்விராஜின் படைக்கும் கோரியின் படைக்கும் போர் மூண்டது. இப்போரில் முகமது கோரி தோற்க -டிக்கப்பட்டார். தோல்வியைக் கண்டு துவளாத கோரி முகமது அடுத்த ஆண்டு பிரித்விராஜின் படையுடன் போர் மேற்கொண்டார். இப்போரில் முகமது கோரி வெற்றியடைந்தார்.

வெற்றியின் உச்சியிலிருந்த கோரி முகமது தனது நம்பிக்கைக்கு பாத்திரமான துருக்கிய அடிமை குத்புதீன் ஐபெக்கிடம் படையெடுப்புப் பொறுப்பை ஒப்படைத்தான். அதுமட்டுமல்ல படையெடுப்புக்கான முழு சுதந்திரத்தையும் அவருக்கு கொடுத்தார். பேரரசை உருவாக்கும் பொறுப்பை முழுமையாக குத்புதீன் ஐபெக்கிடம் ஒப்படைத்த கோரி முகமது தாய்நாடு திரும்பினார்.

கஜினி முகமது போலன்றி இவர் இந்தியா -வில் இஸ்லாமியப் பேரரசை உருவாக்க வேண்டும் என்ற கொள்கையை தெளிவோடு இருந்தார். இந்தியா -வில் இவரது பேரரசை உருவாக்கும் பொறுப்பை இவரது இரண்டு துருக்கிய அடிமைத் தளபதிகளிடம் முழுமையாக ஒப்படைத்தார்.

இம் முகமதிய மாமன்னன் மக்களைத் திருப்தி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டான். இந்துக்களின் ஆதரவை பெற்ற முதல் முஸ்லீம் மன்னன் கோரி முகமதுதான்.